பக்கங்கள்:-28

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | தை 25 | ஞாயிற்றுக்கிழமை | 08.02.2026 | அதிர்வு 192

## லொறி மோதி மாணவி சாவு!

### இரத்தினபுரியில் துயரம்



வீதி யோரத்தில் நடந்து சென்ற பாடசாலை மாணவி லொறி மோதி உயிரிழந்துள்ளார்.

இந்தத் 05





# தமிழ் மக்களின் பாதுகாப்புக்கு இராணுவ முகாம்கள் அவசியம்

## இப்படிக் கூறுகின்றது மஹிந்த அணி

"வடக்கு, கிழக்கில் இராணுவ முகாம்கள், பொலிஸ் நிலையங்கள் இருப்பதால்தான் தமிழ் மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது."

- இவ்வாறு மஹிந்த அணி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சாந்த பண்டார ஊடகங்களிடம் கூறியதாவது:- 05

### அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி

# ராஜபக்ஷக்கள் போல் மக்களை நாங்கள் ஒடுக்கவேமாட்டோம்!

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ உறுதி



"ராஜபக்ஷக்கள் போன்று அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி மக்களை ஒடுக்குவதற்கான நடவடிக்கைகளை நாங்கள் எடுக்கமாட்டோம்" – என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"நாம் கடந்த கால அரசுகள் செய்தபடி அவசரகாலச் சட்டத்தை மக்களின் உரிமைகளை அடக்குவதற்காகப் பயன்படுத்த மாட்டோம். எமது அரசு, பொதுமக்கள் பாதுகாப்பையும், சட்டம் மற்றும் ஒழுங்கை நிலைநாட்டும் விதமாக மட்டுமே சட்டங்களைப் பயன்படுத்தும்.

கடந்த ஆட்சியில் இருந்த ராஜபக்ஷக்கள் அவசரகாலச் சட்டத்தை அரசு மீதான விமர்சனங்களை அடக்கவும், அரசியல் எதிரிகளைக் கட்டுப்படுத்தவும் பயன்படுத்தியிருந்தது. ஆனால் எமது அரசு 05




என்னுடைய வாசகர்கள் மிகவும் 'ஷார்ப்' பானவர்கள் என்பதைப் புரிந்து கொள்கிறேன்.

கடந்த திங்கட்கிழமை என் பத்தியை இப்படி முடித்து இருந்தேன்:–

"தற்போது நடைமுறையில் உள்ள அரசமைப்பின் உருவாக்கத்தின் பின்னர் தமது அரசியல் தேவைக்காக அந்த அரசமைப்பை கொண்டு வந்த ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன சில சித்து விளையாட்டுகளைக் காட்டினார். அதைத் திரும்பவும் செய்யக்கூடிய வலிமை நிலையில் தான் இருக்கின்றது என அநுரகுமார திஸநாயக்க அரசு கருதுகின்றது. அதனைப் பயன்படுத்தி தேர்தல்களை முடக்கும் திட்டம் ஒன்றை தேசிய மக்கள் சக்தி மனதில் கொண்டிருப்பதாக கொழும்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அந்த அரசியல் சதித்திட்டம் யாது என்பதை அடுத்து வரும் தினங்களில் பார்ப்போம்."

– இப்படி என்னுடைய பத்தியை அன்று முடித்திருந்தேன்.

நேற்று வாசகர் ஒருவர் அழைப்பு எடுத்தார். 06

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

# ஆட்சியைத் தக்கவைக்க சூழ்ச்சி செய்யமாட்டோம்

## மக்கள் மறுத்தால் விலகுவோம் என்று ஜே.வி.பியினர் தெரிவிப்பு



"சூழ்ச்சி மூலம் ஆட்சியை தக்கவைக்கும் எவ்வித நோக்கமும் எமக்குக் கிடையாது. மக்கள் விருப்பத்துக்கு மாறாக பலவந்தமாக ஆட்சியில் இருக்கமாட்டோம்." – என்று ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

தனது இந்திய விஜயத்துக்கு முன்னதாக அரச ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாட்டைக் கட்டியெழுப்பவே நாம் ஆட்சியைப் பொறுப்பேற்போம். அதனைச் செய்வதற்கு காலம் எடுக்கும். அதற்குரிய அடித்தளம் தற்போது இடப்பட்டுள்ளது. நாட்டில் ஸ்தீரத்தன்மை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மக்களின் ஆசியுடன் ஆட்சியைத் தொடரவே விரும்புகின்றோம். மாறாக மக்கள் விருப்பமின்றி – பலவந்தமாக ஆட்சியில் இருக்கமாட்டோம். ஆட்சியை தக்கவைத்துக்கொள்வதற்குச் சூழ்ச்சி செய்ய மாட்டோம்.

அதிகாரத்தை நாம் மோசடிக்காகப் பயன்படுத்தவில்லை. நாட்டுக்காகவே பயன்படுத்துகின்றோம். நாட்டுக்குச் சேவை செய்த திருப்தியுடன் மரணிக்க வேண்டும். அது போதும்.

மக்களின்ஆசியுடன்எமதுஆட்சிதொடரும். நாட்டை நாம் கட்டியெழுப்புவோம்." – என்றார்.

# விபத்தை அறிக்கையிடச் சென்ற செய்தியாளர் மீது தாக்குதல்!

## திருமலை அக்போபுர பகுதியில் சம்பவம்

**(எஸ்.கீதபொன்கலன்)**

கந்தளாய் அக்போபுர பொலிஸ் பிரிவில் நேற்று விபத்து ஒன்றை அறிக்கையிடச் சென்ற ஊடகவியலாளர் மீது விபத்தை ஏற்படுத்திய லொறிச் சாரதி மற்றும் அவரது உதவியாளர் இணைந்து தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இது தொடர்பாக அக்போபுர பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

திருகோணமலையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த லொறி ஒன்று, கந்தளாய் – அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கித்துல்ஊற்று பகுதியில் வெள்ளி இரவு வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது.

சாரதிக்கு ஏற்பட்ட நித்திரை கலக்கமே இந்த விபத்துக்குக் காரணம் எனப் பொலிஸார் ஆரம்பக்கட்ட விசாரணைகளின் பின் தெரிவித்துள்ளனர்.

இந்த லொறிச்சாரதி, இதற்கு முன்னர் கந்தளாய் – சூரியபுர பகுதியில் ஒரு விபத்தை ஏற்படுத்தியிருந்தார். அந்தச் சம்பவத்தையும் இதே ஊடகவியலாளரே அறிக்கையிட்டிருந்தார்.

இந்நிலையில், நேற்றைய தினம் காலை கித்துல்ஊற்று விபத்தைப் படம் பிடிக்கத் தாம் சென்றபோது, பழைய கோபத்தை மனதில் வைத்துக்கொண்டு சாரதியும் அவரது உதவியாளரும் இணைந்து, தன்னை தாக்கியினர் என ஊடகவியலாளர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

கந்தளாய் பிரதேச ஊடகவியலாளரே லொறி சாரதி மற்றும் உதவியாளர் ஆகியோரால் தாக்கப்பட்டவராவார்.

தாக்குதல்குறித்துஅக்போபுரபொலிஸ் நிலையத்தில் உத்தியோகபூர்வமாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.












# வவுனியாவில் KFC க்கு 14 நாள்கள் பூட்டு

(கி.வசந்தன்)

வவுனியா நகரில் பிரபல KFC உணவகம் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய குற்றச்சாட்டின் பெயரில் நீதிமன்ற உத்தரவுக்கமைய 14 நாள்களுக்கு பொது சுகாதார பரிசோதகர்களால் மூடப்படடுள்ளது.

இந்த உணவகம் சுகாதார பரிசோதகர்களால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. இதன்போது அவை சுகாதார சீர்கேட்டுடன் இருந்துள்ளமை அவதானிக்கப்பட்டதாகத் தெரிவிக்கச்ப்படுகின்றது.

இதனையடுத்து அந்த உணவகம் நீதிமன்றக் கட்டளையின் பிரகாரம் திருத்தப்பணிகளுக்காக எதிர்வரும் 14 நாள்களுக்கு மூடுமாறு சுகாதார பரிசோதகர்களால் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா நகரில் கண்டி வீதியில் அமைந்துள்ள KFC உணவகத்திற்கே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.






# கொன்கிரீட் கலவை இயந்திரத்தில் சிக்கி 24 வயது இளைஞர் பரிதாப உயிரிழப்பு!

கட்டடம் ஒன்றின் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டிருந்த இளைஞர் ஒருவர் கொன்கிரீட் கலவை இயந்திரத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் களுத்துறை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

யொவுன்கம, பயாகலை பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி இளைஞர், இரண்டுமாடிக் கட்டடம் ஒன்றின் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டிருந்த போது சீமெந்து போடுவதற்காகக் கொன்கிரீட் கலவை இயந்திரத்துக்கு அருகில் சென்றுள்ளார்.

இதன்போது அந்த இளைஞர் கொன்கிரீட் கலவை இயந்திரத்துடன் மேல் மாடியிலிருந்து கீழே வீழ்ந்து இயந்திரத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் களுத்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ரயிலில் மோதி ஒருவர் மரணம்

இரவுநேர தபால் ரயிலில் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அம்பலாங்கொடை – கஹவ ரயில் நிலையத்துக்கு அருகில் மருதானையில் இருந்து காலி நோக்கிப் பயணித்த இரவுநேர தபால் ரயிலில் மோதியே மேற்படி நபர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அம்பலாங்கொடை பகுதியைச் சேர்ந்த 51 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அம்பலாங்கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# எம்.பிக்களின் ஓய்வூதியம் இரத்து: 17 ஆம் திகதி சபையில் விவாதம்!

இலங்கையில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குரிய ஓய்வூதியத்தை இரத்துச் செய்யும் சட்டமூலம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 17ஆம் திகதி முழு நாள் விவாதம் நடத்தப்படவுள்ளது.

நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான குழுக் கூட்டத்திலேயே மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை இரத்துச் செய்யும் சட்டமூலம் அரசமைப்புக்கு முரணானது அல்ல எனவும், சாதாரண பெரும்பான்மையுடன் அதனை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றலாம் எனவும் உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

உயர்நீதிமன்றத்தின் மேற்படி தீர்ப்பை சபாநாயகர் நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார். இந்நிலையிலேயே மேற்படி சட்டமூலம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 17 ஆம் திகதி விவாதம் நடத்தப்படவுள்ளது.

# மட்டக்களப்பு மத்தியஸ்தர் வீதி வாகனத் தரிப்பிட விஸ்தரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம்

**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு மத்தியஸ்தர் வீதியில் வாகனத் தரிப்பிடத்தை மாநகரசபை விஸ்தரிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, அந்த வீதியில் உள்ள பொதுமக்கள் தம்மை சுதந்திரமாக வாழ விடாது அடக்கி ஒடுக்கும் செயல் இது எனக் கண்டித்து நேற்று சனிக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மத்தியஸ்தர் வீதியில் வைத்திய சாலை மதில் ஓரமாக மாநகர சபை தற்காலிக கொட்டகை அமைத்து வாகன தரிப்பிடமாக்கி அதனை குத்தகைக்கு வழங்கி வந்தனர். இந்த நிலையில் அந்த வாகன தரிப்பிடத்தை மேலும் வீதிபகுதியை ஆக்கிரமித்து தற்காலிக கொட்டகை அமைத்து விஸ்தரிப்பு நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

இந்த விஸ்தரிப்பு நடவடிக்கையால் அந்த வீதியில் வசிப்பவர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்கும் நிலைமை ஏற்படும் எனத் தெரிவித்து இந்த விஸ்தரிப்பு நடவடிக்கையை நிறுத்துமாறு அந்த வீதியைச் சேர்ந்த பொதுமக்கள் எதிர்ப்பு வெளியிட்டனர். மாநகரசபை, உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கடிதமூலம் அறிவித்தனர்.

ஆனால் அந்த விஸ்தரிப்பு நடவடிக்கை தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்ற நிலையில் அந்த அடக்கு முறைக்கு எதிராக பொது மக்கள் நேற்று சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு ஆர்ப்பாடத்துக்கு ஏற்பாடு செய்தனர். அங்கு ஒன்று கூடிய பெண்களுக்கு அங்கு வந்த அராஜக கும்பல் ஒன்று அச்சுறுத்தல் விடுத்ததையடுத்து ஒன்று கூடியயவர்களில் சிலர் அங்கிருந்து வெளியேறி வீடுகளுக்குச் சென்றனர்.

இதனையடுத்து அங்கிருந்த ஏனைய பொதுமக்கள் “வேண்டாம்! வேண்டாம்! வாகன தரிப்பிடம்“, “ மத்தியஸ்தர் வீதியில் உள்ள மக்களை சுயாதீனமாக – சுதந்திரமாக – வாழவிடு“, “மாநகரசபையே மத்தியஸ்தர் வீதி மக்களை ஒடுக்காதே!”, “இந்த வாகன தரிப்பிட விஸ்தரிப்புக்கு மட்டக்களப்பு மத்தியஸ்தர் வீதி வாழ் மக்கள் எதிர்ப்பு தெரிவிக்கின்றோம்” என்பன போன்ற வாசகங்கள் கொண்ட சுலோகங்கள் ஏந்தியவாறு நண்பகல் 12.00 மணிவரை எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பின்னர் அங்கிருந்து கலைந்து சென்றனர்.



# பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் மெதடிஸ்த சிற்றாலயம் இன்று பிரதிஷ்டை

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் புனரமைக்கப்பட்ட இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் சிற்றாலய பிரதிஷ்டை நிகழ்வும் 30 ஆவது ஆண்டு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு பருத்தித்துறை கட்டைவேலி சேகர முகாமைக் குரு அருட்சகோதரி திருமதி ஆர் கிறேஸ் சேகர, உதவி முகாமைக் குரு அருட்திரு ஜி சுரேந்தர் ஆகியோர் தலைமையில் நடைபெறவுள்ளது.

புனரமைக்கப்பட்ட தேவாலயத்தை. இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் வடக்கு, கிழக்கு திரு அவைத்தலைவர் அருட்திரு சாம் சுபேந்திரன் பிரதிஷ்டை செய்து வைப்பார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார்.

# ஓட்டோ மோதி வயோதிபர் பலி!

## சாரதி தப்பியோட்டம்




ஓட்டோ மோதி வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் அவிசாவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொழும்பு – மட்டக்களப்பு வீதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

வீதியோரத்தில் நின்று கொண்டிருந்த வயோதிபர் மீதே ஓட்டோ மோதியுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த வயோதிபர் அவிசாவளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

புவக்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 72 வயதுடைய வயோதிபரே உயிரிழந்துள்ளார்.

விபத்துடன் தொடர்புடைய ஓட்டோவின் சாரதி தப்பிச் சென்றுள்ளார்.

சந்தேகநபரைக் கைது செய்ய அவிசாவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

---

## லொறி மோதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

துயரச் சம்பவம் இரத்தினபுரி, எலபத்த பொலிஸ் பிரிவின் கனதொல – இலுக்தென்ன வீதியில் உள்ள 79 ஆம் இலக்க ரப்பர் தோட்டத்துக்கு அருகில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த மாணவி இரத்தினபுரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

அலுகெட்டிய பகுதியைச் சேர்ந்த 11 வயதுடைய மாணவியே உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பாக லொறி சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இது குறித்து எலபத்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

---

## தமிழ் மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"சுதந்திரம் என்பது அபிமானம். அதன் கம்பீரத்தன்மையைக் குறைமதிப்புக்கு உட்படுத்தக்கூடாது. உலகில் எந்தவொரு நாடும் அவ்வாறு செய்யாது.

ஆனால், இலங்கையில் தேசிய மக்கள் சக்தி ஆட்சியின் கீழ் சுதந்திரத்தின் கம்பீரத்தன்மை இல்லாமல் போயுள்ளது. செலவுகளைக் கட்டுப்படுத்துகின்றோம் என்ற போர்வையில் அபிமானம் இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளது.

படையினரின் வீரதீரச் செயல்கள் பற்றி பேசப்படவில்லை. நாட்டில் இன்று அவசரகாலச் சட்டம் அமுலில் உள்ளது. இந்நிலையில் இலங்கையின் 78 ஆவது சுதந்திர தினத்தன்று வடக்கு, கிழக்கில் கறுப்புக்கொடி ஏற்றப்படுகின்றது. இதற்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

வடக்கு, கிழக்கில் இராணுவ முகாம்கள், பொலிஸ் நிலையங்கள் இருப்பதால் தான் தமிழ் மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அங்கு சில இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டுள்ளன. எஞ்சியவற்றையும் அகற்றினால் பொலிஸையும் அகற்றுமாறு கோருவார்கள்." – என்றார்.

## ராஜபக்ஷக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சட்டத்தின் வழியாக மக்களுக்குச் சேவை செய்யும் நோக்கத்துடன் செயற்படுகின்றது.

எதிர்க்கட்சிகள் சொல்வது போல் நாம் செயற்பட முடியாது. எமது அரசின் நோக்கம் ஒழுங்கும் சமத்துவமும் காக்கும் விதமாகச் சட்டத்தை பயன்படுத்துவதே ஆகும்.

நாட்டு மக்கள் எமது அரசை நம்பியிருக்கின்றார்கள். எனவே, எமது நடவடிக்கைகள் சொல்லில் மட்டும் இல்லாமல் செயலிலும் வெளிப்படையாக இருக்க வேண்டும். நாம் சட்டத்தின் உண்மையான நோக்கத்தைக் கடைப்பிடிப்போம். நாம் மக்களின் உரிமைகளை மதிப்போம்.

அவசரகாலச் சட்டம் பொதுமக்கள் பாதுகாப்புக்கும் சமூக அமைதிக்கும் மட்டுமே பயன்படுத்தப்படும்." – என்றார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இந்த விடயத்தைச் சுட்டிக் காட்டினார். 'அடுத்து வரும் தினங்களில் என்றீர்கள். ஐந்து நாள்களாகிவிட்டன. ஆனால், நீங்கள் அது பற்றி எதுவும் எழுதவில்லையே?' – என்று சற்று விசனத்துடன் குறிப்பிட்டார் அவர்.

எவ்வளவு தூரம் வாசகர்கள் என்னுடைய பத்தியில் அவதானமாகவும் கவனிப்பாகவும் இருக்கின்றார்கள் என்பதை இந்தத் தொலைபேசி அழைப்பு உறுதிப்படுத்தியது. கடந்த நாள்களில் எழுத தவறிய அந்த விடயத்தை இன்று எழுதலாம் என்று நினைக்கிறேன்.

அநுரகுமார திஸநாயக்கவின் தேர்தல் கால வாக்குறுதிகளில் மிகவும் பிரதானமானது நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை இல்லாதொழிக்கும் புதிய அரசமைப்பைக் கொண்டு வருவதாகும்.

ஒரு நாட்டின் அரசமைப்பைப் புதிதாக உருவாக்குவது என்பது ஓரிரு நாள்களில் அல்லது ஓரிரு வாரங்களில் அல்லது ஓரிரு மாதங்களில் செய்து முடித்து கூடிய விடயம் அல்ல. பல மட்டங்களில் ஆராய்ந்து, தீர்மானங்கள் எடுத்து, சட்ட வாக்கங்களை மேற்கொண்டு, நீதித் துறை மட்டங்களில் கலந்தாலோசித்து, மரதன் அமர்வுகளை முன்னெடுத்து, நாடாளுமன்றத்தில் நகலைச் சமர்ப்பித்து, மக்களின் கருத்துக்கும் பிரதிபலிப்புக்கும் உட்படுத்தி, பின்னரே அதனை உறுதி செய்ய முடியும். அதற்கு குறைந்தது இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் தொடர் நடவடிக்கைகள் தேவைப்படும்.

ஆனால் தற்போதைய அரசு இந்த விடயத்தை – அரசமைப்பு உருவாக்கத்தை – தமது ஆட்சிக் காலத்தின் இறுதிக் கட்டத்திற்கு ஒத்தி வைத்திருப்பதாக அறிவித்துள்ளது. அது ஓர் உள்நோக்கத்துடனான அரசியல் சதித்திட்டம்தான்.

அரசமைப்பு உருவாக்கம் என்பது புதிய ஆட்சியின் ஆரம்பத்தில் செய்யப்பட வேண்டியது. ஆட்சியின் இறுதிக்கு அதை தாமதிப்பது என்பது முட்டாள்தனமான வேலை என்பதை நல்லாட்சிக் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட அரசமைப்பு முயற்சியை ஒட்டி அப்போது எதிர்க்கட்சியில் இருந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளிப்படையாகச் சுட்டிக் காட்டி இருந்தார்.

அந்தக் கருத்து இப்போதும் – எப்போதும் – பொருத்தத்தக்கது. அப்படி இருக்க, இந்த ஆட்சியாளர்கள் அரசமைப்பு உருவாக்கத்துக்குத் தேவையான மூன்றில் இரண்டு பங்கு நாடாளுமன்றப் பெரும்பான்மை என்ற வலிமையை வைத்துக் கொண்டும், அந்த முயற்சியை ஆட்சியின் – இந்த நாடாளுமன்றத்தின் – இறுதிக் காலத்துக்கு ஒத்திவைத்திருப்பதில் அர்த்தங்கள் – ஆழமான காரணங்கள் – நிறைய உண்டு.

இதே ஜே.வி.பியை கணக்கில் எடுத்துத்தான் 1982 இல் அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன முன்னெடுத்த நடவடிக்கையை இப்போதைய ஜே.வி.பியை உள்ளடக்கிய தேசிய மக்கள் சக்தி தன்னுடைய அரசியல் நகர்வாக முன்னெடுக்கப் போகின்றது என்பதுதான் அரசியல் வட்டாரங்களில் பேசப்படும் விடயமாகும்.

தற்போதைய ஆட்சிக் காலத்தைத் தொடர்ந்து முழுமையாக முன்னெடுத்து அதிகாரத்தை அனுபவித்தபடி அரசியலை நகர்த்தி விட்டு, நான்கு ஆண்டுகளின் பின்னர் ஒருபுறம் புதிய அரசமைப்பு உருவாக்கத்திற்கான முயற்சியையும், மறுபக்கம் ஜனாதிபதி தேர்தலையும் நடத்தித் தன்னுடைய அடுத்த பதவிக்காலத்தை உறுதிப்படுத்தத் திட்டமிடுகிறார் அநுர குமார திஸநாயக்க.

அந்த ஜனாதிபதி தேர்தலில் தான் வெற்றி பெற்று, தமது அடுத்த பதவிக் காலத்தை உறுதிப்படுத்தியதும், அவர் நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை மாற்றும் அரசமைப்பு உருவாக்க முயற்சியை முன்நகர்த்துவார்.

ஆயினும், இந்த நாடாளுமன்றத்தின் இறுதி காலத்திலேயே அதனைத் தீவிரப்படுத்துகின்ற காரணத்தினால் அந்தச் சமயத்தில் அந்த அரசமைப்பு உருவாக்க முயற்சியை இந்த அரசின் பதவி காலத்தில் பூர்த்தி செய்ய முடியாது என்ற நிலைமையை அவர் ஏற்படுத்திக் காட்டுவார்.

அவ்வேளையில் பிரேரிக்கப்பட்டிருக்கும் புதிய அரசமைப்பை மக்களின் கலந்துரையாடலுக்கு அனுமதித்து, அதன் பின்னர் அதனை நடைமுறைக்கு கொண்டு வருவதற்கு காலம் செல்லும் என்பதால், அதற்கு முன்னர் பொதுத் தேர்தலை நடத்துவது சாத்தியமல்ல என்ற ஒரு கருத்தை அப்போது தேசிய மக்கள் சக்தி முன்வைக்கும்.

அரசமைப்புஉருவாக்கத்திற்குமுன்னர் பொதுத் தேர்தலை நடத்தி புதிய நாடாளுமன்றத்தைத் தெரிவு செய்தால் அப்போது புதிய அரசமைப்பை அங்கீகரிக்க கூடிய நாடாளுமன்றப் பெரும்பான்மை – அதாவது மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு – நாடாளுமன்றத்தில் புதிதாக வரக் கூடிய அரசுக்குக் கிட்டாமல் போகும் என்ற காரணத்தை அச்சமயத்தில் தேசிய மக்கள் சக்தி முன்வைக்கும்.

இருக்கின்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவை நாடாளுமன்றத்தில் தக்க வைத்தால் மட்டுமே புதிய அரசமைப்பை கொண்டுவர முடியும் என்ற காரணத்தைக் காட்டி, அதன் அடிப்படையில் தற்போதைய நாடாளுமன்றின் பதவிக்காலத்தை மேலும் நீடிப்பதற்கான ஏற்பாட்டை தற்போதைய அரசமைப்பின் விதிகளுக்கு அமைய தான் முன்னெடுக்கப் போவதாக இந்த அரசு அறிவிக்கும்.

இதைத்தான் 1982 இல் அப்போது தான் புதிதாகக் கொண்டு வந்திருந்த இப்போதைய அரசமைப்பின் கீழ் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன செய்தார்.

நாடாளுமன்றத்தில் தமக்கு இருந்த மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பயன்படுத்தி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியதன் மூலம் அப்போது இருந்த நாடாளுமன்றத்தின் பதவிக் காலத்தை மேலும் ஒரு தடவைக்கு – அப்போதைய கணக்கின்படி ஆறு ஆண்டுகளுக்கு – நீடிப்பதற்கு அவர் வழி செய்தார். அப்படி நாடாளுமன்றின் பதவிக்காலத்தை நீடிக்கும் அரசமைப்பு திருத்தத்தை சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அங்கீகாரம் பெற்று அவர் நடைமுறைக்குக் கொண்டு வந்தார். அந்தச் சமயத்தில் பானைக்கு வாக்களித்தல் அல்லது விளக்குக்கு வாக்களித்தல் என்ற அடிப்படையில் நடத்தப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பு சற்று வயதானவர்களுக்கு இன்றும் நினைவில் இருக்கும்.

அதேபோன்ற ஒரு நடவடிக்கையை முன்னெடுக்க இப்போது மனதில் திட்டம் வைத்திருக்கிறது தேசிய மக்கள் சக்தி என்கிறார்கள் அவதானிகள்.

புதிய அரசமைப்பு உருவாக்கத்தை இந்த அரசின் அந்திம காலத்தில் முன் நகர்த்துதல், அதை நிறைவேற்றுவதற்கு ஒரே வழி இருக்கின்ற நாடாளுமன்றத்தின் பதவிக்காலத்தை மேலும் ஓர் ஆட்சி காலத்துக்கு – இப்போதைய கணக்கின்படி 5 ஆண்டுகளுக்கு – நீடித்தல், அதைச் செய்வதற்கு தேவையான மூன்றிலிரண்டு பங்கு நாடாளுமன்றப் பலம் அரசுக்கு இப்போது உள்ளது, மேலதிகமாக சர்வ ஜன வாக்கெடுப்பு மூலம் மக்களிடமிருந்து அதற்கு அனுமதி பெற்று அதை சட்ட ரீதியாக முன்னெடுப்பது.

– இதுதான் அரசாங்கத்தின் உள்ளார்ந்த திட்டம். அதற்காகத்தான் புதிய அரசமைப்பு உருவாக்கத்தை இந்த ஆட்சி காலத்தின் அந்திமத்துக்கு அது ஒத்தி வைத்திருக்கின்றது என்கின்றனர் விடயம் அறிந்த அரசியல் தரப்பினர்.

சுருக்கமாகக் கூறுவதானால் –

முதலில் அடுத்த ஜனாதிபதி தேர்தலை நடத்தித் தன்னுடைய அடுத்த பதவி காலத்தை அநுரகுமார திஸநாயக்க உறுதிப்படுத்துவார். அதேசமயம் புதிய அரசமைப்பு உருவாக்க விடயங்களை முன் நகர்த்துவார். அந்த அரசமைப்பு உருவாக்கம் கணிசமாக முன்நகர்ந்த நிலையில் அதைத்தொடர்ந்து மேற்கொண்டு முடிவுறுத்துவதற்காக தற்போதைய நாடாளுமன்றத்தை சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதி பெற்று இன்னொரு பதவி காலத்துக்கு நீடிப்பார். இதுதான் அவர்களின் தந்திரோபாயத் திட்டம்.

இலங்கையின் தற்போதைய அரசமைப்பு ஏற்பாடுகளின்படி அத்தகைய அரசியல் நகர்வு சட்டவிரோதமானது அல்ல. அரசமைப்புக்கு அமைவானது. ஆனால், ஜனநாயகத் தார்மீகங்களின்படி அது தவறானது. மக்களின் வாக்குரிமையை சட்ட ஓட்டைகளைப் பயன்படுத்தி நிராகரிக்கும் நடவடிக்கை.

இப்படி செய்வதற்கான வசதி தற்போதைய அரசமைப்பில் உண்டு. நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையையும் சர்வஜன வாக்கெடுப்பில் ஐம்பது வீத மக்களின் ஆதரவையும் பெறக்கூடிய தரப்பு இதனைச் செய்ய முடியும். இதனைத்தான் 1982 இல் ஜனநாயக நடவடிக்கை என்ற பெயரில் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன முன்னெடுத்தார்.

அச்சமயத்தில் முதலாவது கிளர்ச்சிக்குப் பின்னர் ஜே.வி.பி. மீண்டும் தீவிரம் பெறத் தொடங்கியிருந்தது.

அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன முதலாவது ஜனாதிபதித் தேர்தலை 1982 ஆம் ஆண்டு ஒக்டோபர் 20ஆம் திகதி சந்தித்து, அதில் வெற்றி பெற்றமை மூலம் தமது இரண்டாவது பதவிக்காலத்தை ஆரம்பித்திருந்தார்.

ஜனாதிபதி தேர்தலில் ஜே.வி.பி. தலைவர் றோஹண விஜேவீர குறிப்பிடத்தக்களவு வாக்குகளை எடுக்காமல் விட்டாலும் (ஜே.ஆர்.ஜெயவர்த்தன 34 லட்சத்து 50 ஆயிரம் வாக்குகள் பெற்றபோது 3 ஆவது இடத்துக்கு வந்த றோஹண விஜேவீர ஆக 2 லட்சத்து 73 ஆயிரம் வாக்குகளே பெற்றார்) அக்கட்சி திரைமறைவில் பெரும் சக்தியாக வளர்ந்து வருவதை ஜே.ஆர். உணர்ந்து கொண்டார். அந்தப் பின்புலத்தில் ஒரு பொதுத் தேர்தலை நடத்துவது தமது தரப்புக்கும், தமக்கு அப்போது இருக்கின்ற நாடாளுமன்றப் பெரும்பான்மைக்கும் 07▶

## இரகசியம் பரகசியம்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பெரும் பின்னடைவை தரலாம் என்று அஞ்சிய அவர், அதன் காரணமாக சர்வஜன வாக்கெடுப்பு மூலம் நாடாளுமன்றத்தின் பதவிக்காலத்தை நீடிக்கும் தந்திரத்தை முன்னெடுத்தார். அதைக் கூட காலத்தை இழுத்தடித்துத் தாமதித்து, நிலைமை மோசமடைய விடாமல், பொதுத் தேர்தல் நடத்துவதற்கு எட்டு மாதங்கள் இருக்கையில் முற்கூட்டியே நடத்தினார்.

இலங்கை வரலாற்றில் முதலாவதும் இதுவரையில் கடைசியானதுமான அந்த சர்வஜன வாக்கெடுப்பு ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன தமது இரண்டாவது பதவிக்காலத்தை ஆரம்பித்து இரண்டு மாதங்களில் - 1982 டிசம்பர் 22ஆம் திகதி - நடைபெற்றது.

அவ்வாறு பொது தேர்தலை நடத்தாமல் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் தமது அரசின் பதவிக்காலத்தை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ஜனாதிபதி ஜெயவர்த்தன நீடிக்கும் முடிவை எடுத்தமையின் பின்புலத்தில் ஜே.வி.பியின் அப்போதைய அதீத வளர்ச்சி தொடர்பில் அவருக்கு இருந்த அச்சமும் ஒரு காரணமாக அமைந்தது.

அந்த சர்வஜன வாக்கெடுப்புக்கு பின்னர் 7 மாதங்களில் இடம்பெற்ற 1983 ஆம் ஆண்டின் ஜூலைக் கலவரத்துக்கான காரணத்தை, அந்தக் கலவரத்தோடு தொடர்பேபடாத ஜே.வி.பி. மீது சுமத்தி, அந்த அமைப்பை மீண்டும் தடை செய்தார் ஜே.ஆர்.ஜெயவர்த்தன.

ஜே.வி.பியின் அப்போதைய அசுர வளர்ச்சி அவருக்கு அச்சமயத்தில் பெரும் அச்சத்தை தந்திருந்தது என்பது மறுக்க முடியாத உண்மை.

அன்று பொதுத் தேர்தலை தவிர்த்து சர்வஜன வாக்கெடுப்பு மூலம் நாடாளுமன்றத்தின் பதவிக்காலத்தை ஜே.ஆர். ஜெயவர்த்தன நீடித்தமைக்கு ஜே.வி.பி. பற்றிய அவரது அச்சம் ஒரு காரணம்.

இப்போது அதே ஜே.வி.பி., அதே ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் தந்திரத்தை பயன்படுத்தி தன்னுடைய தற்போதைய ஆட்சியையும் மேலும் ஒரு பதவி காலத்துக்கு நீடிப்பதற்கு வாய்ப்பு உண்டு என்பதுதான் நிலைமை. அதற்குத் தேவையான மூன்றிலிரண்டு பங்கு நாடாளுமன்றப் பெரும்பான்மையை அத்தரப்புக்கு இலங்கை மக்கள் 2024 இல் வழங்கி விட்டார்கள். பயனை - பலனை - அவர்கள் அனுபவித்துத்தானே ஆக வேண்டும்...?



நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


# நீதி முறைமைத் தவறு

நாடு முழுவதும் உள்ள சிறைச்சாலைகளில் கடும் நெரிசல் நிலவுவதாக முன்னாள் சிறைச்சாலைத் துறை செய்தித் தொடர்பாளர் லயன் ஜகத் சந்தன வீரசிங்க தெரிவித்திருக்கின்றார்.

நாடு முழுவதும் ஆக 10,500 பேரை மட்டுமே தங்க வைக்கக்கூடிய வசதிகளைக் கொண்ட சிறைக் கூடங்களில் 40,000 கைதிகள் அடைக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்ற அதிர்ச்சித் தகவலை அவர் வெளியிட்டிருக்கின்றார்.

"40,000 கைதிகள் மற்றும் சந்தேக நபர்களில், 66 குழந்தைகள் அடங்குவர். கூடுதலாக, 18 பெண்கள் உட்பட மரண தண்டனை விதிக்கப்பட்ட 806 குற்றவாளிகள் தண்டனை விதிக்கப்பட்ட சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். கொலை, கொள்ளை மற்றும் போதைப் பொருள் குற்றங்களில் ஈடுபட்டனர் எனச் சந்தேகிக்கப்படும் சுமார் 2,000 பெண்கள் தடுப்புக் காவலில் உள்ளனர். கைதிகளில் பெரும்பாலானோர் படிக்காதவர்கள், மேலும் பலர் படிப்பறிவில்லாதவர்கள். இந்தத் திடுக்கிடும் சூழ்நிலையில் பாதிக்கப்பட்டவர்கள் இளைஞர்கள் மற்றும் பெண்கள் என்பது வருத்தமளிக்கிறது. கல்வி நிர்வாக சேவையில் ஒரு மூத்த அதிகாரியின் மகன் கூட போதைப்பொருள் குற்றத்திற்காக சிறைத்தண்டனை அனுபவித்து வருகிறார்" என்று அவர் கூறியிருக்கின்றார்.

நமது சட்ட - நீதி முறைமையின் நடைமுறையாக்கத்தின் அவல நிலைமையை இந்த விவரங்கள் எடுத்துக் கூறுகின்றன என்றால் அது மிகையல்ல.

இலங்கையில் உள்ள சிறைச்சாலைகள் அவற்றின் கொள்ளளவை விட சுமார் 400 வீதம் அதிகமான கைதிகளை கொண்டிருக்கின்றன. நிரம்பி வழிகின்றன.

அதிகரித்து வரும் போதைப் பொருள் பாவனைக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் மற்றும் நீண்ட கால விளக்கமறியல் போன்றவை காரணமாக சிறைகளில் கடும் நெரிசல், சுகாதார சீர்கேடு மற்றும் மனித உரிமை மீறல்கள் அதிகரித்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

சிறை கைதிகளில் அறுபது வீதத்திற்கும் அதிகமானோர் விசாரணைக்காகக் காத்திருக்கும் விளக்கமறியல் கைதிகள் என்பது குறிப்பிடத்தக்கது. இதில் பலர் சிறுசிறு குற்றங்களுக்காக நீண்ட காலம் அடைக்கப்பட்டுள்ளனர்.

சிறிய குற்றங்களை விசாரணை செய்வதற்கும் நீண்ட காலம் எடுக்கின்ற இலங்கையின் மிக மோசமான சட்ட - நீதி முறைமையே இத்தகைய சீரழிவு நிலைகளுக்கு மிகப் பிரதான காரணம் என்பது கவனத்திற்குரிய விடயமாகும்.

எடுத்தவுடன் வழக்குகளை கண்மூடித்தனமாக தள்ளிப்போட்டுத் தவணை வழங்குதல், சிறிய குற்றங்களுக்கான விடயங்களைக் கூட விரைந்து முடிக்காமல் நாள்கள், வாரங்கள் தள்ளி போட்டு இழுத்தடித்தல் போன்றவை சிறைகள் நிரம்புவதற்குப் பிரதான காரணங்களில் அடங்குகின்றன.

சிறிய குற்றங்களை விரைந்து முடித்து, அபராதம் முதலிய தண்டனைகளை வழங்கி, வழக்குகளை முடிவுறுத்தல், பிணை வழங்குவதை எளிதாக்குதல், சிறைச்சாலைகளை நவீனப்படுத்துதல் போன்ற சீர்திருத்தங்கள் இப்போது அவசியமென வலியுறுத்தப்படுகின்றன.

நாட்டின் சிவிலியன்களை விளக்கமறியலுக்காகவோ அல்லது குற்றத் தண்டனைக்காகவோ சிறைக்கு அனுப்புவது என்பது அந்த கைதியின் நலனை அரசு - குறிப்பாக நீதித்துறை - பொறுப்பேற்கின்றது என அர்த்தமாகும். அது, அரசுக்குக் கடமையாக்கப்படுகின்ற விடயமாகும்.

அந்தக் கைதி குற்றம் இழைத்தாரா, அல்லது வெறும் சந்தேக நபரா அல்லது அப்பாவியா என்பவை எல்லாம் வேறு விடயங்கள். ஆனால் அந்தக் கைதியின் அடிப்படை நலனை உரிய முறையில் பேணத் தவறினால் அந்தக் கைதியைப் பொறுப்பேற்கும் அரசும் பெரும் குற்றம் இழைத்ததாகவே அது அர்த்தமாகும்.

தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் 53 பேர் 1983 ஜூலை கலவர சமயம் சிறைக்குள் அடித்து கொல்லப்பட்டமை தொடக்கம் இற்றை வரை கைதிகள் விடயத்தில் நாடும் அரசும் இழைத்து வரும் குற்றங்கள் தனி நபர்கள் ஆயின் பல தடவைகள் தூக்கில் இடப்பட வேண்டிய தண்டனைக்குரிய அளவுக்கு மோசமானவை என்பதை ஆட்சித் தரப்பினரும் கைதிகளுக்கு பொறுப்பான நீதித் தரப்பினரும் நீதி அமைச்சும் மறந்து விடக்கூடாது.



# டித்வா புயல் அனர்த்தம் காரணமாக பெற்றோரை இழந்த 103 சிறுவர்கள்

டித்வா புயல் காரணமாக 103 சிறுவர்கள் தாய், தந்தை அல்லது இருவரையும் இழந்துள்ளனர் என மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்துள்ளார்.

மேற்படி சிறுவர்களைப் பராமரிப்பதற்கும் அவர்களின் எதிர்காலப் பாதுகாப்புக்கும் ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் பேரில் விசேட வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பெற்றோரை இழந்த சிறுவர்களைப் பொறுப்பேற்க பலர் முன்வந்துள்ளனர் எனவும் அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்துள்ளார்.

அதன்படி, முறையான சட்ட நடைமுறைகளைப் பின்பற்றி, நீதிமன்ற உத்தரவுகளுக்கு உட்பட்டு இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இலவங்கப்பட்டையினால் கோடிகளில் வருமானம்



இலவங்கப்பட்டை தயாரிப்புகளை ஏற்றுமதி செய்ததன் மூலம் கடந்த ஆண்டில் 8 ஆயிரம் கோடி ரூபா வருமானத்தை ஈட்ட முடிந்ததாக இலவங்கப்பட்டை அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தில் 300 மில்லியன் அமெரிக்க டொலர் இலக்கை அடைவதற்குத் தமது நிறுவனம் எதிர்பார்ப்பதாக அந்தத் திணைக்களத்தின் பணிப்பாளர் ஜனக லிந்தர தெரிவித்துள்ளார்.

இவற்றில், இலவங்கப்பட்டை சுருள்களே அதிகளவு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாகவும், இதன்மூலம் 251 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏனைய வருமானம் இலவங்கப்பட்டை பட்டை, இலைகள் மற்றும் எண்ணெய் ஆகியவற்றின் மூலம் கிடைத்துள்ளது.

இதற்கு முன்னர், இலங்கை சுமார் 70 நாடுகளுக்கு மாத்திரமே ஏற்றுமதி செய்திருந்த போதிலும், 2025 ஆம் ஆண்டில் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளுக்குத் தயாரிப்புகளை ஏற்றுமதி செய்துள்ளதாக ஜனக லிந்தர குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் இலவங்கப்பட்டை உலகில் “சிலோன் சினமன்” என்ற பெயரில் மிகவும் பிரபலமடைந்துள்ளதாகவும் அந்தத் திணைக்களத்தின் பணிப்பாளர் ஜனக லிந்தர தெரிவித்துள்ளார்.









# தேசிய வாசிப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நூலக வாகனங்களை வழங்கும் ஆரம்ப நிகழ்வு

"க்ளீன் ஸ்ரீலங்கா" தேசிய வேலைத் திட்டத்திற்கு இணைவாக முன்னெடுக்கப்படும் 'அருணு தொர' தேசிய வாசிப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், மேல் மாகாணத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 உள்ளூராட்சி மன்றங்களுக்கு நடமாடும் நூலக வாகனங்களை வழங்கும் ஆரம்ப நிகழ்வு நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த திட்டத்தின் முதற்கட்டத்தின் கீழ், நவீன வசதிகளுடன் கூடிய 10 நடமாடும் நூலக வாகனங்கள் மற்றும் 9,300 புத்தகங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இதற்காக "க்ளீன் ஸ்ரீலங்கா" செயலகம் நிதி ஒதுக்கீடுகளை வழங்கியுள்ளதுடன், மேல் மாகாண சபையின் உள்ளூராட்சி திணைக்களம் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றது.

இந்த நூலக வாகனங்கள் கெஸ்பேவ, சீதாவகாபுர ஆகிய நகர சபைகளுக்கும் ஹோமாகம, தொம்பே, அத்தனகல்ல, மினுவாங்கொடை, வத்தளை, புலத்சிங்கள, வலல்லாவிட்ட மற்றும் பாலிந்த நுவர ஆகிய பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இந்த வேலைத்திட்டத்தின் மூலம் பிரதேச மட்டத்திலான வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்கும், நூலக வசதிகளை பொதுமக்களின் இருப்பிடங்களுக்கே கொண்டு செல்வதற்கும் எதிர்பார்க்கப்படுவதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.















# மழையுடனான வானிலை இன்று முதல் குறைவடையும்

நாட்டில் தற்போது நிலவும் மழையுடனான வானிலை இன்று முதல் எதிர்வரும் 11ஆம் திகதி வரை தற்காலிகமாகக் குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஊவா மாகாணத்திலும் மாத்தளை, நுவரெலியா, அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களிலும் சிறிதளவில் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன், மேல் மற்றும் சபரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் சில இடங்களில் பிற்பகல் 2.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மேலும் மத்திய மலைநாட்டின் கிழக்கு சரிவுகளிலும் வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் மாத்தளை, திருகோணமலை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 30 – 40 கிலோமீற்றர் வரையான வேகத்தில் ஓரளவு பலத்தகாற்று வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# வெளிநாடுகளிலுள்ள தொழிலாளர்கள் நாட்டிற்கு அனுப்பும் பணம் அதிகரிப்பு




வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கையர்களிடமிருந்து நாட்டிற்கு அனுப்பப்படும் பணத்தின் அளவு, 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் 751.1 மில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டியுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

2025ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பெறப்பட்ட 573.0 மில்லியன் அமெரிக்க டொலர்களுடன் ஒப்பிடுகையில், இது 31.1 சதவீத வளர்ச்சியாகும்.

கடந்த 2025 ஆம் ஆண்டு முழுவதிலும் மொத்தம் 8.076 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வெளிநாட்டுப் பணவனுப்பல்களாகக் கிடைத்துள்ளன. இது இலங்கையின் வரலாற்றில் ஒரு மைல்கல்லாகக் கருதப்படுகிறது.

2026 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலேயே இவ்வாறான ஒரு பலமான முன்னேற்றம் காணப்படுவது, நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பை மேலும் உறுதிப்படுத்த உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2025 ஆம் ஆண்டு இறுதியில் நாட்டின் மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்குகள் 6.8 பில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்வடைந்துள்ள நிலையில், வெளிநாட்டுத் தொழிலாளர்களின் இந்தப் பங்களிப்பு நாட்டின் பொருளாதார மீட்சிக்கு முக்கிய தூணாக அமைந்துள்ளதாக மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.



# கிரிக்கெட் மட்டையால் தாக்கி இளைஞன் ஒருவர் கொலை

இரத்மலானை பகுதியில் கிரிக்கெட் மட்டையால் தாக்கப்பட்டு இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இரு குடும்பங்களுக்கு இடையிலான மோதலே இறுதியில் ஒருவரின் உயிரைப் பறித்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தர்மாராம வீதி ரயில் பாதைக்கு அருகில் வசிக்கும் இரு குடும்பங்களுக்கு இடையே நேற்று முன்தினம் மோதல் ஏற்பட்டுள்ளது.

வாக்குவாதம் முற்றிய நிலையில், ஒரு தரப்பினர் கிரிக்கெட் மட்டை மற்றும் விக்கெட் தடிகளால் அந்த இளைஞனை சரமாரியாகத் தாக்கியுள்ளனர்.

இதில் பலத்த காயமடைந்த இளைஞன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார், நான்கு பெண்கள் மற்றும் இரு ஆண்கள் என மொத்தம் 6 பேரைக் கைது செய்துள்ளனர்.

உயிரிழந்த இளைஞன் அதே பகுதியைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை கல்கிசை பொலிஸின் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# ‘முழு நாடுமே ஒன்றாக’ திட்டம் ஒரே நாளில் 777 பேர் கைது!



ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய, நாட்டில் போதைப்பொருளை தடுக்கும் நோக்கிலான “முழு நாடுமே ஒன்றாக” எனும் தேசிய திட்டத்தின் கீழ், நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் சுமார் 777 பேர் போதைப்பொருள்களுடன் கைதுசெய்யப்பட்டனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், தடுப்புக்காவல் உத்தரவு பெற்ற 15 பேரும், சட்டவிரோத சொத்துக்கள் தொடர்பான விசாரணைகளுக்கமைய 09 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதுடன், 762 சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன.

மேலும், 19 பேர் மறுவாழ்வு நிலையத்திற்கு அனுப்பிவைக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

இந்த போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளின்போது சிக்கிய சந்தேக நபர்கள் வைத்திருந்த போதைப் பொருள்களையும் இதன்போது பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அதற்கமைய, சந்தேகநபர்களிடமிருந்து, 434 கிராம் ஹெரோயின், 477 கிராம் ஐஸ், 02 கிராம் 536 மில்லிகிராம் கொக்கெய்ன், 05 கிலோகிராம் 643 கிராம் கஞ்சா, 3,757 கஞ்சா செடிகள், 04 கிலோகிராம் 643 கிராம் குஷ் ரக போதைப்பொருள், 31 கிராம் ஹஷீஷ் ரக போதைப்பொருள், 781 போதை மாத்திரைகள், 111 கிராம் மதனமோதகம் மற்றும் 66 கிராம் மாவா போதைப் பொருள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.



# பேரினவாத இனம் வாழ வேண்டும் என்பதற்காக ஐயாயிரம் ஏக்கர் பெருங்காடுகளை அழிப்பதா?

## கிவுல் ஓயா பிழையான திட்டம் என ரிஷாத் எம்.பி ஆதங்கம்

(கி.வசந்தன்)

பேரினவாத இனம் வாழ வேண்டும் என்பதற்காக 500 ஏக்கர் பெருங் காடு களை அழித்து செய்யும் பிழையான திட்டமே கிவுல் ஓயா திட்டம் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

வவுனியா சாளம்பைக்குளத்தில் புதி தாக ஆரம்பிக்கப்பட்ட மதராசாவை நேற்று ஆரம்பித்து வைத்த பின்னர் ஊட கங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

"பிரஜாசக்தி"என்றஒன்றைஉருவாக்கு கின்ற பொழுது நாங்கள் சந்தோசம டைந்தோம். அதன் ஊடாக அந்தந்த பிரதேசங்கள் முன்னேறும் என்ற ஒரு நம்பிக்கை இருந்தது. ஆனால், அந்த நிர்வாகத்தைச் செய்கின்ற பொழுது அதற்கு, அந்த ஊரில் இருக்கின்ற நிர்வா கத்தோடு, அத்துடன் பள்ளி, கோயில், எந்த நிர்வாகத்தோடும் கலந்துரையாடா மல், அங்கு இருக்கின்ற கிராம அபி விருத்தி சங்கம், பெண்கள் அமைப்புக் கள் அல்லது பாடசாலை அபிவிருத்திக் குழு என எவருடனும் கலந்துரையாடா மல், அந்த ஊரில் இருக்கின்ற கல்வி மான்களோடு அல்லது அந்த ஊரில் இருக்கின்ற சமூகப் பற்றாளர்களோடு கலந்துரையாடாமல், அந்தந்த கிரா மங்களிலே யார் கடந்த தேர்தலில் இந்த அரசாங்கத்திற்கு போஸ்டர் ஒட்டுவது போன்ற வேலைகளைச் செய்தார்களோ அவர்களைத் தலைவர்களாக நியமித்து, அவர்களுக்குக் கீழே அவர்கள் விரும்பு கின்ற பலரை உறுப்பினர்களாக நிய மித்துச் செயல்படுகின்ற ஓர் அமைப்பாக அது மாறி இருக்கிறது.

அந்தந்தப் பிரதேசங்களில் இந்த நாட்டுச் சட்டத்தின் பிரகாரம், யாப்பின் பிரகாரம் பிரதேச சபை, நகர சபை, மாநகர சபை உறுப்பினர்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் கூட தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கு அந்த கட்சியைச் சாராதவர்களாக இருந்தால் இந்தக் குழுவில் கூட தலைவர்களா கவோ அல்லது உறுப்பினர்களாகவோ சேர்க்கப்படாமல் செயல்படுவது ஒரு சிறுபிள்ளைத்தனமான செயல்பாடு.

இந்த நாட்டிலே பேரினவாத சக்தி களுடைய கடந்த காலச் செயல்பாட்டி னால் தனிநாடு கேட்டு ஒரு சமூகம் போரா டிய வரலாறு இருக்கின்ற பொழுது, இந்த நாட்டில் இன, மத பேதங்களுக்கு அப்பால் அநுர குமார திசாநாயக்க என்ற ஒருவரை ஜனாதிபதியாக்குவதற் காக யாழ்ப்பாணம் தொடக்கம் ஹம்பாந் தோட்டை வரை வாழ்கின்ற மக்கள் இன, மத பேதங்களுக்கு அப்பால் அவருக்கு ஆதரவு தெரிவித்ததற்குரிய நன்றிக்கட னாக, இன்று அந்தந்த கிராம ஊரவர்கள் தாங்கள் விரும்பித் தெரிவு செய்த பிரதேச சபை அல்லது உள்ளூராட்சி உறுப்பினர் களைப் புறம் ஒதுக்கிவிட்டு, யாரோ ஒரு வர் வந்து அல்லது அந்தக் கட்சிக்கு போஸ்டர் ஒட்டினாரோ அல்லது அந்தக் கட்சிக்கு வால் பிடித்தாரோ அவரை ஊர் தலைவராக நியமிக்கின்ற ஒரு செயல் பாடு இந்த நாட்டிலே ஒரு சாபக்கேடாக நாங்கள் பார்க்கிறோம்.

75 வருட சாபக்கேடு என்று பேசிய வர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு எந்தவொரு அரசாங்கமும் செய்யாத ஒரு மோசமான செயலை இந்தப் பேரில் செய்து கொண் டிருப்பது அவர்களுடைய எதிர்கால அரசியலுக்கு ஒரு பேராபத்தாக அமை யும் என்பதை இந்த இடத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கிவுல் ஓயா திட்டம் என்பது தமிழ் மக் கள் வாழ்ந்த அந்தப் பிரதேசங்களில்

தொடர்ச்சி▼






# பேரினவாத இனம் வாழ வேண்டும் என்பதற்காக ஐயாயிரம் ஏக்கர் பெருங்காடுகளை அழிப்பதா?

## கிவுல் ஓயா பிழையான திட்டம் என ரிஷாத் எம்.பி ஆதங்கம்

தொடர்ச்சி▲

பாரம்பரியமான ஒரு பெரிய காட்டை அழித்து ஒரு திட்டத்தை கொண்டு வருகிறார்கள். பாரம்பரியக் காடு அது. மன்னாரில்அல்லதுசாளம்பைக்குளத்தில்,பெரிய மடுவில் அல்லது மடுவில் இருந்த காடுகள் எல்லாம் ஏற்கனவே பழைய காடுகள் அல்ல. அதெல்லாம் 2009 சமாதானத்திற்குப் பிறகு 2012-லேயே தான் காடுகளாக வர்த்தமானி அறிவித்தல் மூலம் அப்படி அறிவிக்கப்பட்டன.

ஆனால் அந்தக் கிவுல் ஓயா திட்டம் என்று இப்போது 5,000 ஏக்கர் காட்டை அழிக்க எடுக்கின்ற அந்தச் செயல்பாட்டில் அந்தக் காடுகள் பல நூறு வருடங்கள் பழமை வாய்ந்த காடுகள். பல தசாப்தங்களுக்கு முன்னர் வனவளத் திணைக்களத்திற்கு என வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்ட காணிகள். ஒரு பேரினவாத இனம் வாழ வேண்டும் என்பதற்காக - வேறு மாவட்டத்தில் வாழ்கின்ற பேரினவாத மக்களைக் கொண்டுவந்துகுடியேற்றவேண்டும்என்பதற்காகச் - செய்கின்ற ஒரு பெரிய சதி.

அந்தச் சதிக்கு 5,000 ஏக்கர் பெரிய காணிகளை, பெருங்காடுகளை அழித்துச் செய்கின்ற ஒரு பிழையான திட்டம். உண்மையாக இந்த நாட்டிலே சுற்றுச் சூழலைப் பாதுகாக்க வேண்டும் என்று சிந்திக்கின்றவர்கள் இருந்தால் இதற்கு எதிராகத்தான் வழக்கு போட வேண்டுமே ஒழிய, இதற்கு எதிராகத்தான் செயல்பட வேண்டுமே ஒழிய, மன்னார் - புத்தளம் பாதை 100 வருடம் பழமை வாய்ந்த பாதையை மூடுவதற்கு வழக்கு போட்டு அதிலே வெற்றி கண்டு, அதில் சந்தோஷமடைவது, அதை நியாயப்படுத்திப் பேசுவது நியாயமானதல்ல.

எனவே இவ்வாறான கிவுல் ஓயா திட்டம்தான் உண்மையான சுற்றுச்சூழல் பாதிப்பு. உண்மையான ஒரு பெரிய அநியாயம். அதுவும் இந்த நாடு - இவ்வாறான ஒரு நாட்டில் வடகிழக்கு தமிழ் பேசும் மக்கள் அதிகமாக வாழ்கின்ற வவுனியா மாவட்டத்திலே இவ்வாறான அல்லது இந்த வன்னி மாவட்டத்தில் இவ்வாறான செயல்பாடு கண்டிக்கத்தக்கது. இதற்கு எதிரான செயல்பாடுகளில் எமது கட்சியும் ஒன்று சேர்ந்து செயற்படும். தமிழ் தரப்புகள் எங்களை இது சம்பந்தமாக அழைக்கவில்லை. அவர்கள் எடுக்கின்ற இந்த நடவடிக்கைகளுக்கு நாங்களும் பூரண ஆதரவை எதிர்காலத்தில் வழங்கிச் செயல்படுவோம். - என்றார்.







# இந்துக் கல்லூரி கொழும்பில் வீற்றிருக்கும் வித்தக விநாயகரின் மஹா கும்பாபிஷேகம்

இந்துக் கல்லூரி கொழும்பு வளாகத்தினுள் வீற்றிருந்து அருள் பாலிக்கும் ஸ்ரீவித்தக விநாயகர் திருக்கோவில், புனரமைக்கப்பட்டு அதன் மஹா கும்பாபிஷேகப் பெருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை வெகுவிமரிசையாக நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு நேற்று சனிக்கிழமை, காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகிய யாகபூஜை விஷேட திரவ்ய ஹோமம், பூர்ணாகுதி மற்றும் தீபாராதனையைத் தொடர்ந்து

காலை முதல் மாலை வரை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்தி தமது வழிபாடுகளை மேற்கொண்டனர்.

தொடர்ந்தும் கிரியை நிகழ்வுகளான ஆலய சுத்தி, பிம்ப சுத்தி ரஷாபந்தனம், பூர்வசந்தானம், யாகபூஜை ஹோமம், ஸ்பரிசாகுதி, பூர்ணாகுதி, தீபாராதனை, ஆச்சார்யபூஜனம் ஆகியவை நடைபெற்றன.

மேலும், நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இந்த மஹா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு கிரியாகால நிகழ்வுகள் காலை கணபதி ஹோமம் மற்றும் நவகிரஹ ஹோமத்துடன் ஆரம்பமாகி, மாலை வாஸ்து சாந்தி மற்றும் அங்குரார்ப்பணச் சடங்குகளோடு நடைபெற்றதோடு விசேட நிகழ்வாக திருக்கயிலாய பரம்பரை, தருமபுரம் ஆதீனம் 27 ஆவது குரு மகா சந்நிதானம் ஜகத்குரு ஸ்ரீலஸ்ரீகயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் விசேட வருகையும், அவர்தம் திருக்கரங்களால் கலச பூஜை மற்றும் ஸ்ரீவித்தக விநாயகர் ஆலய மூலஸ்தான கலசம் வைக்கும் நிகழ்வும் சுவாமிகளின் அருளாசியுடன் இனிதே நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இன்று நடைபெறவுள்ள கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 48 நாள்களுக்கு மண்டலாபிஷேக பூஜைகள் தினமும் காலை 5.30 மணி முதல் 7.30 மணி வரை நடைபெறவுள்ளமையோடு, எதிர்வரும் மார்ச் மாதம் 28 ஆம் திகதி சனிக்கிழமை அன்று மண்டலாபிஷேகப் பூர்த்தி விழா சிறப்பாக நடைபெறவுள்ளது.

இந்தத் திருக்குடமுழுக்கு விழாவினை இந்துக் கல்லூரி கொழும்பின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் பாடசாலை அபிவிருத்திக் குழுவினர் மற்றும் நலன் விரும்பிகள் இணைந்து ஏற்பாடு செய்துள்ளதோடு, இந்த உன்னதமான ஆன்மீக நிகழ்வில் அனைத்து அடியார்களையும் கலந்து கொண்டு வித்தக விநாயகரின் அருளைப் பெறுமாறு கல்லூரி விழாக்குழுவினர் அழைக்கின்றனர்.







# கலைக்கு உயிர் புகுத்தும் இளம் தலைமுறையினர்!

## பரதநாட்டிய அரங்கேற்ற நிகழ்வில் வடக்கு ஆளுநர் பாராட்டு

"தமிழரின் பண்பாடு மற்றும் கலாசார விழுமியங்களைப் பிரதிபலிக்கும் கலை வடிவங்களில் பரதநாட்டியம் முதன்மையானது. சிவபெருமானின் ஆனந்த தாண்டவம் மற்றும் ருத்ர தாண்டவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட இத்தகைய பாரம்பரியக் கலையைக் கற்பதில் எமது இளம் தலைமுறையினர் காட்டும் ஆர்வம், எமது கலை, கலாசாரத்தின் இருப்பை உறுதி செய்கின்றது."

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

பொன்னாலை சந்திர பரத கலாலயத்தின் இயக்குநர் திருமதி ஶ்ரீதேவி கண்ணதாசன் அவர்களின் மாணவியும், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் தரம் 11 மாணவியுமான செல்வி லக்ஸ்மிகா திஸாகரனின் பரதநாட்டிய அரங்கேற்ற நிகழ்வு, நேற்று சனிக்கிழமை பிற்பகல் யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் நடைபெற்றது.

வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தின் முன்னாள் பிரதிக்கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்) கா.சந்திரபாலன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஆளுநர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:–

"சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் கல்வி பயிலும் செல்வி லக்ஸ்மிகா திஸாகரனின் குடும்பப் பின்னணியை நான் நன்கறிவேன். கலைகளின் பால் ஈர்க்கப்பட்ட குடும்பத்திலிருந்து வந்த இவர், தனது கல்வியுடன் இணைந்ததாக, கடுமையான அர்ப்பணிப்புடன் இக்கலையை முறையாகப் பயின்று இன்று அரங்கேற்றம் செய்வது பாராட்டத்தக்கது.

இவரது குரு திருமதி ஶ்ரீதேவி கண்ணதாசன் மிகச் சிறந்த கலைஞர். அவரது நடன நிகழ்வுகள் எப்போதும் தரம் வாய்ந்தவை. அவரது தந்தையாரும் சிறந்ததொரு நிர்வாகி. அத்தகைய குருவிடம் பயின்ற மாணவியான லக்ஸ்மிகாவின் ஆற்றுகை, இன்று ஒரு "அரங்கேற்றம்" என்பதைத் தாண்டி, முதிர்ச்சியானதொரு கலைஞரின் ஆற்றுகையைப் போன்று பிரமிப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.

சிவபெருமான் ஆனந்தமாக இருக்கும்போது "ஆனந்த தாண்டவமும்", சீற்றத்துடன் இருக்கும்போது "ருத்ர தாண்டவமும்" ஆடுவார் எனப் புராணங்கள் கூறுகின்றன. அந்தச் சிவனை மையப்படுத்திய அவரின் நடன வடிவத்தை அடிப்படையாகக் கொண்டே இந்தப் பரதநாட்டியக் கலையும் அமைந்திருக்கின்றது. அத்தகைய தெய்வீகக் கலையை எமது பிள்ளைகள் தொடர்வது மகிழ்ச்சியளிக்கின்றது.

இலங்கையில் பரதநாட்டியத்தைப் பயிலும் மாணவர்களின் கற்றல் அனுபவங்களை விரிவுபடுத்தும் வகையில், மகரகம தேசிய கல்வி நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ள "பரதநாட்டியம்" எனும் வாசிப்புத் துணைநூல் மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். மாணவர்கள் இந்நூலில் உள்ள விடயங்களைத் தமதாக்கிக் கொண்டு, இத்துறையில் இன்னும் உயர்ந்த நிலையை அடைய வேண்டும்." – என்றார்.

இந்நிகழ்வில் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ஓய்வுநிலை விரிவுரையாளர் திருமதி சாந்தினி சிவனேசன் உள்ளிட்ட சிறப்பு விருந்தினர்கள், மதகுருமார்கள், கல்விமான்கள், கலைஞர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.











# மன்னார் பிரதான பாலக் கடற்கரையோரத்தில் சூழல் பாதுகாப்புக்காக கண்டல் தாவர நடுகை

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர். லெம்பேட்)**

சுற்றுச்சூழல் பாதுகாப்பை அடிப்படையாகக் கொண்டு "கடற்கரையோரங்களை பாதுகாப்போம்" எனும் தொனிப் பொருளில் மன்னார் றோட்டறக்ட் கழக இளைஞர்கள் இணைந்து மன்னார் பிரதான பாலப் பகுதியில் காணப்படும் கரையோரப் பகுதிகளில் நேற்று சனிக்கிழமை காலை கண்டல் தாவரங்களை நடுகை செய்துள்ளனர். மன்னார் றோட்டறக்ட் இளைஞர் கழகம் உள்ளூர் இளைஞர்களுடன் இணைந்து ஏற்பாடு செய்த இந்த நிகழ்வில் றோட்டரிக் கழகத்தின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிறப்பு அதிதியராக்ச் கலந்து கொண்டு மரம் நடுகையை ஆரம்பித்து வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து சுமார் நூற்றுக்கு மேற்பட்ட கண்டல் தாவரங்கள் அந்தப் பகுதியில் நாட்டி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.











# சண்முகதாசன் நினைவுப்பேருரை

கம்யூனிஸ்ட் தலைவர் என்.சண்முகதாசனின் 33 ஆவது நினைவுதினத்தை முன்னிட்டு மார்க்சிய கற்கைகளுக்கான சண்முகதாசன்நிலையம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் விநோதன் மண்டபத்தில் நினைவுப் பேருரை நிகழ்வை ஏற்பாடு செய்திருக்கிறது.

சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பெரியசாமி முத்துலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் சட்டத்தரணியும் அரசியல், மனித உரிமைகள் செயற்பாட்டாளருமான சுவஸ்திகா அருலிங்கம் “இலங்கை எதிர்நோக்கும் உள்நாட்டு மற்றும் பூகோள அரசியல் சவால்கள்“ என்ற தொனிப்பொருளில் நினைவுப் பேருரையை நிகழ்த்துவார்.



# இந்து மாமன்றத் தலைமையகத்தில் திருமுறை வகுப்புத் தொடக்கவிழா





















இலங்கையில் திருமுறை வகுப்பு தொடக்கவிழா கொழும்பு அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைமையகத்தில் தலைவர் திருமதி அபிராமி கைலாசபிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இத்தொடக்கவிழாவில் தருமையாதீனம் 27 ஆவது குரு மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியசுவாமிகள் நூற்றாண்டு விழா திருமுறை வகுப்பை ஆரம்பித்து வைத்தார். இந்து மாமன்றத்தில் சுவாமிகளுக்கு பாதபூஜை மற்றும் வசந்த மண்டப பூஜை நடைபெறுவதையும், தொடர்ந்து நந்திக்கொடியை ஏற்றியபின் ஆறுதிருமுருகன், வி.கந்தசாமி இருவரும் சுவாமியை ஆசீர்வதித்து மாலை அணிவப்பதையும், தலைவி திருமதி அபிராமி கைலாசபிள்ளைக்கு

பன்னிரு திருமுறை நூலினை வழங்குவதையும் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம்

**(படப்பிடிப்பு :- எஸ்.எம்.சுரேந்திரன்)**





# லண்டனில் கறுப்பு நாள் பேரணி

இலங்கையின் சுதந்திர தினத்திற்கு எதிராக சுதந்திர தினமான பெப்ரவரி 4 ஆம் திகதி லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகம் முன்பாக பிரிட்டிஷ் தமிழ் அமைப்புகள் போராட்டம் நடத்தின. பல தமிழர்கள் இலங்கை சுதந்திர தினத்தைக் “கறுப்பு நாள்“ எனக் கருதி, தமிழர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள், நீண்டகால அரசியல் பிரச்சினைகள், அநீதிகளுக்கு எதிராகக் குரல் எழுப்பித் தங்கள் ஆட்சேபத்தை வெளிப்படுத்தினர்.

இந்த போராட்டத்தில் நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் கலந்து கொண்டு, பதாகைகள் மற்றும் கொடிகளை ஏந்தி கோஷங்கள் எழுப்பினர். 2009 ஆம் ஆண்டு இறுதிப் போரின் போது தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்டவை எனக் கூறப்படும் இனப்படுகொலை, காணாமல் போனோர் விவகாரம் மற்றும் நீதியின்மைக்கு எதிராக போராட்டக்காரர்கள் தங்களது எதிர்ப்பை ஒன்றுபட்டு வெளிப்படுத்தினர்

☆ தமிழர்களுக்கான நீதி மற்றும் பொறுப்புக்கூறல்

☆ மனித உரிமை மீறல்களுக்கு சர்வதேச விசாரணை

☆ தமிழர் அரசியல் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு

தொடர்ச்சி▼




















# லண்டனில் கறுப்பு நாள் பேரணி

### தொடர்ச்சி▲

– போன்றன போராட்டத்தின் முக்கிய கோரிக்கைகளாக அமைந்தன.

போராட்டத்தின் ஒரு பகுதியாக, இலங்கைத் தூதரகத்தின் முன்பிருந்து தொடங்கிய இந்த எதிர்ப்பு நிகழ்வு, பின்னர் லண்டன் நகரின் முக்கிய பகுதிகளின் வழியாக பேரணியாகவும் தொடரப்பட்டது. “Justice for Tamils”, “International Investigation Now” உள்ளிட்ட வாசகங்கள் கொண்ட பதாகைகள் மூலம் போராட்டக்காரர்கள் தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தினர்.

இந்த போராட்டம் மூலம், தமிழர்களின் நீண்டகால அரசியல் பிரச்சினைகள் மற்றும் மனித உரிமை விவகாரங்கள் தொடர்பாக சர்வதேச சமூகத்தின் கவனம் ஈர்க்கப்பட வேண்டும் என்பதே தங்களது நோக்கம் எனப் போராட்டத்தில் பங்கேற்றவர்கள் தெரிவித்தனர்.

















# லண்டனில் கறுப்பு நாள் பேரணி


















# சாணக்கியனின் நியமனத்தை வரவேற்று மக்கள் களுவாஞ்சிக்குடியில் பட்டாசு வெடித்து மகிழ்ச்சி

**(மட்டக்களப்பு நிருபர்)**

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற குழுவின் தலைவராக தெரிவு செய்யப்பட்ட இரா.சாணக்கியன் எம்.பிக்கு வாழ்த்துத் தெரிவித்து களுவாஞ்சிகுடியில் மக்கள் பட்டாசு கொழுத்தி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளனர்.

இரா.சாணக்கியனின் ஆதரவாளர்கள் கடந்த வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு களுவாஞ்சிகுடி நகரில் அமைந்துள்ள பஸ் தரிப்பிடத்தில் வைத்து பிரயாணிகளுக்கு இனிப்புக்கள் பரிமாறி, பட்டாசு கொழுத்தி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

இதன்போது மண்முனை தென் எருவிப் பற்று பிரதேச சபைத் தவிசாளர் மேகசுந்தரம் வினோராஜ், போரதீவுப் பற்றுப் பிரதேச சபைத் தவிசாளர் விமலநாதன் மதிமேனன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் எனப் பல இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.











# இராமகிருஷ்ண மிஷனின் இருபெரும் துறவியரின் சிலைகள் பூண்டுலோயாவில் நேற்றுத் திறப்பு விழா

(காரைதீவு சகா)

உலகளாவிய இராமகிருஷ்ண மிஷனை ஸ்தாபித்த வீரத்துறவி சுவாமி விவேகானந்தர் மற்றும் உலகின் முதல் தமிழ் பேராசிரியர், முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் ஆகியோரது திருவுருவச்சிலைகள் அவுஸ்திரேலிய காரைதீவு மக்கள் ஒன்றியத்தின் (ஒஸ்கார் – AusKar) ஏற்பாட்டில் பூண்டுலோயாவில் நேற்று சனிக்கிழமை திறந்து வைக்கப் பட்டது.

இச் சிலைகள் மத்திய மலையகத்தில் நுவரெலியா மாவட்டத்தில் கொத்மலை பிரதேச செயலாளர் பிரிவிலே பூண்டுலோயா விவேகானந்த மகாவித்தியாலயத்தில் நேற்றுய் அதிபர் ஆறுமுகம் ரவீந்திரன் தலைமையில் திறந்து



வைக்கப்பட்டன.

இராமகிருஷ்ண மிஷனின் இலங்கைக் கான தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்த ஜீ மஹராஜ் மற்றும் மட்டக்களப்பு மாநில பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மஹராஜ் ஆகியோர் சிலைகளைத் திறந்து வைத்தனர்.

ஒஸ்கார் சார்பில் தாயக இணைப்பாளர் ஓய்வு நிலை உதவி கல்விப் பணிப்பாளர் வித்தகர் விபுலமாமணி வி.ரி. சகாதேவ ராஜா நட்சத்திர அதிதியாக கலந்து சிறப்பித்தார். மேலும் பல அதிதிகள் கலந்து சிறப்பித்தனர்.

ஒஸ்காரின் துறவியர் படிவமலர் வெளியிட்டு வைக்கப்பட்டது. நூலாசிரியர் வி.ரி.சகாதேவராஜா முதற் பிரதிகளை சுவாமிகளுக்கு வழங்கி வைத்தார்.

ஒஸ்காரின் தலைவர் கந்தசாமி பத்மநாதன் நிதி அனுசரணையில் மக்களுக்கும் ஆசிரியைகளுக்கும் புது வஸ்திரங்கள் வழங்கப்பட்டன.

ஒஸ்காரின் ஏற்பாட்டில் அன்னதானம் இடம் பெற்றது.











# பொல்பிட்டிய பொலிஸ் நிலையம் புனரமைக்கப்பட்டு திறந்துவைப்பு

**(பொகவந்தலாவ: எஸ்.சதீஸ்)**

மத்திய மாகாணத்தின் ஹட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொல்பிட்டிய பொலிஸ் நிலையம் அரசாங்க நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்டு நேற்று முன்தினம் மக்கள் பயன்பாட்டிற்காக உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

பொது பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபாலவும் பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி பிரியந்த வீரசூரியவும் இந்த நிகழ்வில் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

மேலும், நுவரெலியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மஞ்சுள சுரவீர, ஹட்டன் பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் பிரதீப் வீரசேகர மற்றும் உயர் பொலிஸ் அதிகாரிகள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

பிரதேசத்தின் சட்டம் மற்றும் ஒழுங்கைப் பாதுகாத்து, பொதுமக்களுக்கு மிகவும் வினைத்திறனான மற்றும் தரமான சேவையை வழங்குவதே இந்த புனரமைப்பின் முக்கிய நோக்கம் என்று திறப்பு விழாவின் போது தெரிவிக்கப்பட்டது.













# தமிழ் நாட்டில் மிகப் பெரிய தோல்வியை பா.ஜ.கவும், அ.தி.மு.கவும் அடையவுள்ளன

## முதல்வர் ஸ்டாலின் சூளுரை



"தமிழ்நாட்டில் தோல்வி என்பது பா.ஜ.கவிற்கு புதிது இல்லை. ஆனால், இதுவரை அடைந்த தோல்வியைவிட மிகப்பெரிய தோல்வியை பா.ஜ.கவும், சுயநலத்துக்காகச் சுயமரியாதையை விற்றுடில்லிக்குசேவகம்செய்யும்அடிமை அ.தி.மு.கவும் அடையப் போகின்றன."

– இவ்வாறு தமிழக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்.

தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்று விருதுநகரில் நடைபெற்ற தி.மு.க. இளைஞரணியின் தென்மண்டல நிர்வாகிகள் சந்திப்புக் கூட்டத்தில் உரையாற்றினார். அப்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழ்நாட்டிற்கு பூச்சியம் என்று சொன்ன ஒன்றிய அரசை எதிர்த்து குரல் கொடுக்காமல், பா.ஜ.க.வின் கிளைச் செயலாளராக மாறியிருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி. எடப்பாடி பழனிசாமி இப்போது முழுவதுமாக என்.டி.ஏ. பழனிசாமியாக மாறி நிற்கிறார். .நானும் ரவுடிதான், நானும் ரவுடிதான். என்று சொல்வது போன்று, மைக் முன்னால் நின்று கொண்டு, நான்தான் கூட்டணிக்குத் தலைமை, நான்தான் கூட்டணிக்குத் தலைமை. என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார். சொல்லவில்லை. புலம்பிக் கொண்டிருக்கிறார்.

இந்த நிலையில், ஒரு வித்தியாசமான போராட்டத்தை இப்போது அவர் அறிவித்திருக்கிறார். பா.ஜ.க. அரசு கொண்டு வந்திருக்கும் 125 நாள் வேலைத் திட்டத்தை நாம்தடுக்கிறோமாம். அதற்காகப்போராட்டமாம். அவர் முதலில் அந்தச் சட்டத்தைப் பற்றி எதையாவது படித்தாரா? அந்தச் சட்டத்தின் பெயரை அவரால் சொல்ல முடியுமா? அப்படி இருந்தால், அவருடைய அறிக்கையில் அதை ஏன் குறிப்பிடவில்லை? 100 நாள் வேலை என்பது, உரிமையாக இருந்தபோதே 50 நாள்கூட பா.ஜ.க. அரசு வேலை தரவில்லை. இப்போது எவ்வாறு 125 நாள் கொடுப்பார்கள்? இதில் என்ன என்றால், இனி மாநில அரசுதான் 40 விழுக்காடு நிதியைத் தர வேண்டும் என்று வேறு மாற்றியிருக்கிறார்கள். இதெல்லாம் பழனிசாமி அவர்களுக்குத் தெரியுமா, தெரியாதா? என்ன சட்டம், என்ன திருத்தம் செய்திருக்கிறார்கள் என்று ஒன்றும் தெரியாமல், இவர் வந்தால் 150 நாள்களுக்கு உயர்த்துவோம் என்று வேறு அறிவித்திருக்கிறார். ஓனரை மிஞ்சிய லேபராக இப்போது இருக்கிறார் பழனிசாமி அவர்கள்.

அவர்கள் கூட்டணியில் இருக்கும் "டிசைனைப்" பாருங்கள். ஜெயலலிதா மரணத்திற்குப் பிறகு, முதலில் சசிகலாவை முதலமைச்சராக்க நினைத்தார்கள். அது முடியாமல் போன காரணத்தினால்தால், கூவத்தூரில் வைத்துப் பழனிசாமியைக் கொண்டு வந்தார்கள். தனக்குப் பதவி கொடுத்தவர்களையே கட்சியில் இருந்து நீக்கினார் பழனிசாமி. கடந்த தேர்தலில் அனைவரும் பிரிந்து பிரிந்து நின்றார்கள். இப்போது, அதில் பாதி பேர் பா.ஜ.க.வுடனே திரும்ப வந்து சேர்ந்து கொண்டு இணைந்துவிட்டார்கள். இவர்கள் மொத்தத்தில் மக்கள் நலனுக்காக கூட்டணி நடத்தவில்லை. இவர்களுக்குள்ளே 'மியூசிக்கல் சேர்'–தான் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்.

நடக்க இருக்கும் தேர்தல், ஒட்டுமொத்த தமிழ்நாடு "வெர்சஸ்" என்.டி.ஏ. .இதில் நாம் தமிழ்நாட்டை வெற்றி பெற வைக்க வேண்டும். தமிழ்நாட்டில் தோல்வி என்பது பா.ஜ.க.விற்கு புதிது இல்லை. தினமும் காலையில் சூரியன் உதிப்பதைப் போன்று அவர்களுக்கு அது ஒரு "ரொட்டீன்". ஆனால், இதுவரை அடைந்த தோல்வியைவிட மிகப்பெரிய தோல்வியை பா.ஜ.க.வும், சுயநலத்துக்காகச் சுயமரியாதையை விற்று டில்லிக்கு சேவகம் செய்யும் அடிமை அ.தி.மு.க.வும் அடையப்போகிறது. இதுவரை அடைந்த வெற்றிகளைவிட மிகப்பெரிய வெற்றியைத் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி அடையப் போகிறது.

வளர்ந்த தமிழ்நாட்டை, மேலும் சிறந்த தமிழ்நாடாக உயர்த்துவோம். முன்னேறிய தமிழ்நாட்டை இன்னும் முற்போக்கான தமிழ்நாடாக உயர்த்துவோம். அதற்கு இளைஞரணியினர் உங்களுடைய முழு உழைப்பைக் கொடுக்க வேண்டும். உங்கள் உழைப்பிற்கான உயர்வு நிச்சயம் உங்களைத் தேடி வரும். தமிழ்நாடா – என்டிஏவா என்ற ஜனநாயகப் போரில் நாம் வெல்வோம்." என்று தெரிவித்தார்.

# மலேசியாவில் மோடிக்கு உற்சாக வரவேற்பு: முக்கிய ஒப்பந்தங்கள் இன்று கையெழுத்து




பிரதமர் மோடி 2 நாள் பயணமாக நேற்று மலேசியா சென்றடைந்தார். அங்கு அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. இரு தரப்புக்கும் இடையே இன்று பல்வேறு முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாக உள்ளன.

மலேசியாவுக்கு வருமாறு பிரதமர் நரேந்திர மோடிக்கு அந்நாட்டு பிரதமர் அன்வர் இப்ராகிம் அழைப்பு விடுத்தார். அதை ஏற்று, 2 நாள் பயணமாக பிரதமர் மோடி நேற்று மலேசியா சென்டைந்தார்.

கோலாலம்பூர் விமான நிலையத்தில் அவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்தியா – மலேசியா இடையே தொடர்ந்து சிறப்பான நட்புறவு உள்ளது. அந்த உறவை இன்னும் வலுப்படுத்த இரு நாட்டு தலைவர்களும் முடிவெடுத்துள்ளனர்.

இதுகுறித்து மலேசியாவுக்கான இந்திய தூதரக அதிகாரி பி.என்.ரெட்டி குறிப்பிடுகையில்,

"பிரதமர் மோடி வருகையின்போது இந்தியா – மலேசியா இடையே வர்த்தகம், பொருளாதாரம், வளர்ந்து வரும் தொழில்நுட்பம், எரிசக்தி, கல்வி உட்பட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பு குறித்து விரிவாக ஆலோசனை நடத்தப்பட உள்ளது.

வழக்கமான துறைகள் மட்டுமின்றி, புதிதாக வேறு எந்த துறைகளில் இரு நாடுகளும் சேர்ந்து செயல்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன என்பது குறித்தும் ஆலோசிக்கப்படும்." – என்றார்.

இரு நாடுகளுக்கும் இடையே இன்று முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாக உள்ளன. மோடி வருகையை முன்னிட்டு,மலேசியாவில்வாழும்இந்தியர்கள் கோலாலம்பூரில் பிரம்மாண்ட நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்துள்ளனர். இதில் ஆயிரக்கணக்கான இந்தியர்கள் பங்கேற்க உள்ளனர். இதில் மலேசியாவின் கலாச்சார நிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளன. பிரதமர் மோடியுடன், அந்நாட்டு பிரதமர் அன்வர் இப்ராகிமும் இதில் பங்கேற்கிறார்.

# தாக்கினால் பதிலடி கொடுப்போம்: அமெரிக்காவிற்கு ஈரான் எச்சரிக்கை





மத்திய கிழக்கில் நிலைநிறுத்தப்பட்டுள்ள அமெரிக்கப் படைகளால் ஈரான் தாக்கப்பட்டால், பிராந்தியத்தில் உள்ள அமெரிக்க இராணுவத் தளங்கள் மீது பதில் தாக்குதல் நடத்தப்படும் என ஈரானின் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அரக்சி எச்சரித்துள்ளார்.

அமெரிக்கப் படைகள் ஈரானைத் தாக்கினால், அதற்குப் பதிலாக மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்கத் தளங்களை ஈரான் குறிவைக்கும் என்றும் இத்தகைய நடவடிக்கை அந்தத் தளங்களை கொண்டுள்ள நாடுகளுக்கு எதிரான தாக்குதலாகக் கருதப்படக் கூடாது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஓமனில் இரு நாடுகளுக்கும் இடையே நடைபெற்ற நேர்மறையான மறைமுக அணுசக்திப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து, ஒரு நாள் இடைவெளியில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# மார்ச் மாதத்திற்குள் போர் நிறுத்தம் உக்ரைன் விவகாரத்தில் ட்ரம்ப் தீவிரம்



உக்ரைன் மற்றும் ரஷ்யாவுக்கு இடையிலான போரை முடிவுக்குக் கொண்டுவருவது தொடர்பாக மிகச் சிறந்த பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்றன என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

யுக்ரைன் விவகாரத்தில் தற்போது இடம்பெற்று வரும் பேச்சுவார்த்தைகள் மிகவும் சாதகமாக இருப்பதாகவும், இதன் மூலம் விரைவில் ஏதாவது ஒரு நல்ல விடயம் நடக்கலாம் என்றும் ட்ரம்ப் செய்தியாளர்களிடம் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அபுதாபியில் இடம்பெற்ற முத்தரப்பு பேச்சுவார்த்தைகளின் விளைவாக, உக்ரைன் மற்றும் ரஷ்யா இடையே 314 போர்க் கைதிகளை பரிமாறிக்கொள்ள இரு நாடுகளும் சம்மதம் தெரிவித்துள்ளன.

எதிர்வரும் மார்ச் மாதத்திற்குள் இரு நாடுகளுக்கும் இடையே ஒரு சமாதான ஒப்பந்தத்தை எட்டுவதை அமெரிக்கா இலக்காகக் கொண்டுள்ளது. எனினும், உக்ரைனின் நிலப்பரப்பு தொடர்பான சிக்கல்கள் இன்னும் தீர்க்கப்படாததால், இந்த காலக்கெடு நீட்டிக்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

எட்டப்படும் எந்தவொரு அமைதி ஒப்பந்தமும் உக்ரைன் மக்களிடம் பொது வாக்கெடுப்புக்கு விடப்பட வேண்டும் என்றும், அதனுடன் இணைந்து அங்கு தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்றும் அமெரிக்க மற்றும் உக்ரைன் தரப்பு அதிகாரிகள் ஆலோசித்து வருகின்றனர்.

இந்தப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து, அமெரிக்கா மற்றும் ரஷ்யாவிற்கு இடையிலான உயர்மட்ட இராணுவத் தொடர்புகளை மீண்டும் ஆரம்பிக்க இரு நாடுகளும் இணங்கியுள்ளன.

தமது இரண்டாவது பதவிக்காலத்தில் இந்தப் போரை முடிவுக்குக் கொண்டு வருவதாக உறுதியளித்திருந்த ட்ரம்ப், தற்போது அதற்கான இராஜதந்திர நகர்வுகளைத் தீவிரப்படுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# திருமண நிகழ்வுக்கு சென்ற பஸ் பள்ளத்தில் கவிழ்ந்து 13 பேர் பலி



நேபாளத்தின் மேற்கு பகுதியான சுதூர் பச்சிம் மாகாணத்தின் பைதடி மாவட்டத்தில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 13 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 34 பேர் காயமடைந்துள்ளனர்.

திருமண நிகழ்ச்சிக்காக பைதடி நகரின் பாவ்னி கிராமத்திலிருந்து பாஜங் நகரின் சன்குடா கிராமத்தை நோக்கி பயணித்த பஸ், மலைப்பாதையில் சென்று கொண்டிருந்த போது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து சுமார் 150 முதல் 200 மீற்றர் ஆழமுள்ள பள்ளத்தில் கவிழ்ந்து விபத்திற்குள்ளாகியுள்ளதாக நேபாள பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது. சம்பவ இடத்திலேயே 6 பேர் உயிரிழந்தனர். மேலும் 7 பேர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளனர் என பைதடி மாவட்ட பொலிஸ் துறை உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த விபத்தில் பஸ்ஸில் பயணித்த 34 பேர் காயமடைந்துள்ளமையுடன், அவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனால், உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

# இன்றைய ராசி பலன்கள்- 08.02.2026




இன்று நீங்கள் புதிய கட்ட வளர்ச்சி நோக்கி முன்னேறுவீர்கள். முறையான திட்டமும் தொழில் சார்ந்த அணுகுமுறையும் உங்கள் முயற்சியில் வெற்றியை ஏற்படுத்தும்.

உங்கள் பணியில் பெயரும் புகழும் பெறுவீர்கள். பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும்.

உங்கள் துணையிடம் நேர்மையான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று பணவரவு சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பை உயர்த்துவீர்கள். உங்கள் தரத்தை உயர்த்துவீர்கள். இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்கும். உங்கள் இலக்கை நோக்கி முயற்சி செலுத்துவீர்கள். இதன் மூலம் திருப்தியான பலன் கிடைக்கும். உங்கள் நண்பர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

கடின உழைப்பின் மூலம் வெற்றி காண்பீர்கள். சக பணியாளர்களிடம் நல்லுறவு கொண்டிருப்பீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையான முறையில் உணர்வுகளை வெளிபடுத்துவீர்கள். இது நல்லுறவு ஏற்பட வழி வகுக்கும்.

இன்று நிதிநிலை சிறப்பாக இருக்கும். கணிசமான தொகை சேமிப்பீர்கள். திருப்திகரமான நிலை பெறுவீர்கள்.

இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும். இதனால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று ஏற்படும் பதற்றம் மற்றும் பாதுகாப்பின்மை உணர்வை கட்டுப்படுத்த வேண்டும். எதிர்மறை எண்ணங்கள் தவிர்க்கப்பட வேண்டும். நம்பிக்கை உணர்வின் மூலம் நற்பலன்களைப் பெறலாம்.

இன்று மன திடமும் நம்பிக்கையும் வேண்டும். இதன் மூலம் தடைகளைசமாளித்து உங்கள் பணிகளை ஆற்ற முடியம்.

உங்கள் துணையை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.கருத்து வேறுபாடு காணப்படும். நீங்கள் தேவையற்ற பேச்சுக்களை பேசுவீர்கள்.

இன்று பணம் குறைந்து காணப்படும். செலவுகள் அதிகமாக இருக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருப்பதாக உணர இயலாது. தொண்டை எரிச்சல் ஏற்படலாம். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.




இன்று உங்களிடம் காணப்படும் உத்வேகம் காரணமாக நீங்கள் விரைந்து செயலாற்றுவீர்கள். உங்கள் நலத்திற்கான பயனுள்ள முடிவை விரைவாக எடுக்கும் வகையில் உங்கள் மனநிலை இருக்கும்.

உங்களிடம் இருக்கும் சிறப்பான தகுதி காரணமாக இன்று உங்கள் செயல்களை சிறப்பாக செய்வீர்கள். உங்கள் பணிக்கு சிறந்த அங்கீகாரம் பெறுவீர்கள்.

உங்கள் மனதில் ஓடும் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் இருவரிடையேயான உறவு மேம்படும்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாகவும் மகிழ்சிகரமாகவும் இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்க காண்பீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் இலக்குகளை நேர்மையான முயற்சி மூலம் அடைவீர்கள். உங்களிடம் உறுதியும் தைரியமும் காணப்படும். தன்னம்பிக்கை நிறைந்து காணப்படும்.

உங்கள் பணியில் நல்ல பெயரெடுப்பீர்கள். உங்கள் பணி செய்யும் முறை காரணமாக உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். அவரை மகிழ்ச்சிக்குள்ளாக்குவீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று அதிக பண வரவு காணப்படும். உங்கள் வங்கியிருப்பை அதிகரிப்பீர்கள். உங்களின் வளர்ச்சி கண்டு மகிழ்வீர்கள். உங்கள் மனம் அனுசரணையான நிலையில் இருக்கும்.




இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். இன்று சிறிது பாதுகாப்பின்மை உணர்வும், குறைந்த மகிழ்ச்சியும் காணப்படும். எனவே அமைதியாக இருப்பது சிறந்தது.

பலன்கள் உங்களுக்கு சாதகமாக இருக்க நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இதனால் நீங்கள் உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை இழப்பீர்கள்.

உங்கள் துணையுடன் தகவல் பரிமாற்ற பிரச்சினை காணப்படும். உங்களிடம் இன்று சிறந்த மன நிலை காணப்படாது.எனவே இன்று இருவரும் பேசுவதை தவிர்ப்பது நல்லது.




உங்கள் இலக்குகளை அடைய கடுமையாக உழைக்க வேண்டும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். இன்றைய நாள் சிறப்பாக அமைய இன்று பொறுமை அவசியம்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். சக பணியாளர்களிடம் கவனமாக இருக்க வேண்டும்.

இன்று உங்கள் காதலை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். என்றாலும் நல்ல புரிந்துணர்வு ஏற்பட குறைந்த வாய்ப்பே உள்ளது. இன்று நிதி நிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். இன்றைய நாளை பயனுள்ள முதலீடுகள் செய்ய பயன்படுத்திக்கொள்ளுங்கள் .




இன்று சம்பவங்களை சகஜமாக எடுத்துக்கொள்ள வேண்டும். உங்கள் வளர்ச்சியை தடுக்கும் எந்த உணர்வுக்கும் இடம் கொடுக்கக் கூடாது. உங்கள் அணுகுமுறையில் விவேகம் வேண்டும்.

பணியிடச் சூழல் குறைந்த அனுகூலத்துடன் காணப்படும். சகபணியாளர்களுடன் பிரச்சினை காணப்படும். திட்டமிட்டு பணிகளை திறமையாக ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள இயலாது. நீங்கள் இன்று சிறிய விஷயங்களைக் கூட பெரிதாக எடுத்துக் கொள்வீர்கள். இது நல்லுறவை பாதிக்கும்.இன்று பண இழப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.

# இன்றைய ராசி பலன்கள்- 08.02.2026




உங்களின் சொந்த முயற்சி மூலம் வெற்றி காண்பீர்கள். அதே சமயத்தில் திருப்தி குறைந்து காணப்படும். தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள்.

நீங்கள் சிறப்பாக பணியாற்று வீர்கள். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். பணிகளை விரும்பி ஆற்றுவீர்கள்.

உங்கள் துணையை சந்திப்பதில் மகிழ்ச்சியடைவீர்கள். இருவரும் பயனுள்ள விஷயங்களைப் பேசுவீர்கள். இது உங்கள் எதிர்காலத்தைப் பற்றி திட்டமிட உதவும்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். பணத்தை பயனுள்ள விஷயங்களுக்கு செலவு செய்ய பயன் படுத்துவீர்கள்.

இன்று முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது.




இன்று தடைகளும் தாமதங்களும் நிறைந்து இருப்பதாக உணர்வீர்கள். முக்கிய முடிவுகளை வேறு நாளைக்கு தள்ளிப் போடுவது நல்லது. நல்ல இசையைக் கேட்பதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

பணிகள் சுமூகமாக நடக்க சகபணியாளர்களுடன் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இன்று பணிகள் அதிகமாக காணப்படும்.

உங்கள் துணையுடன் சண்டையில் ஈடுபட வாய்ப் புள்ளது. அதனால் திருப்தியான மனநிலை காணப்படாது.

இன்று தேவையில்லாத செலவுகள் காணப்படும். வீட்டை புனரமைப்பதற்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

கால் வலி மற்றும் முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. ஓய்வாக இருக்க வேண்டும்.




இன்றைய செயல்களை மேற் கொள்வதை கடினமாக உணர்வீர்கள். இதனால் உங்கள் கட்டுப்பாட்டை இழப்பீர்கள். எனவே உங்கள் அணுகுமுறையில் பொறுமையும் உறுதியும் அவசியம்.

இன்று உங்கள் பணிகள் சுமூக மாக நடக்காது. உங்கள் சக பணியாளர்களிடம் அமைதியை கையாளவும்.

உங்கள் துணை உங்களை புறக்கணிப்பதாக எண்ணுவீர்கள். அதனால் எரிச்சல் உணர்வை துணையிடம் வெளிப்படுத்துவீர்கள்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. இதனால் மனதில் குழப்பம் காணப்படும். எதிர்பாராத வகையில் பணம் வந்தாலும் அதனை பயனுள்ள வகையில் பயன்படுத்த இயலாது.

கண்கள் மற்றும் தொண்டையில் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளதால் மருத்துவ சிகிச்சை மேற்கொள்வது சிறந்தது. இதற்காக சிறிது பணம் செலவு செய்ய நேரும்.




உங்களிடம் உறுதி இருந்தால் இன்று வளர்ச்சி காண்பீர்கள். நம்பிக்கையுடன் இருந்தால் வெற்றி உங்கள் கதவைத் தட்டும்.

உங்கள் பணிக்கு பாராட்டு பெறு வீர்கள். உங்களிடம் காணப்படும் ஆற்றல் உங்கள் பணியில் பிரதி பலிக்கும்.

இன்று மகிழ்ச்சியான மாலைப் பொழுதாக இருக்கும். நீங்கள் மகிழ்ச்சியுடன் கானப்படுவீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள்.

இன்று நிதிநிலை பொதுவாக சிறப்பாக உள்ளது. என்றாலும் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய கடன் வாங்க நேரலாம்.

உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி மற்றும் நேர்மறையான மனநிலை காரணமாக இன்று ஆரோக் கியம் சிறப்பாக இருக்கும்.

# செம்பியன்பற்றில் கண்டுபிடிக்கப்பட்ட வெடிக்காத மோட்டார் வகைக் குண்டு



(பூ.லின்ரன்)

யாழ் வடமராட்சி கிழக்கு செம்பியன் பற்று தனிப்பனை பகுதியில் நேற்றைய தினம் பிற்பகல் வெடிக்காத நிலையில் மோட்டார் வகைக்குண்டு ஒன்று இனங் காணப்பட்டுள்ளது

இந்தொ பகுதியில் வசிக்கும் நபர்கள் ஆடு மேய்ப்பதற்காக காட்டுப்பகுதிக்கு சென்ற போது வெடிக்காத நிலையில் மோட்டார் வகைக்குண்டு ஒன்றை அவதானித்து உள்ளனர்.

உடனடியாக அவர்கள் மருதங்கேணி பொலிஸாருக்கு அறிவித்த னர். அந்த இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் அந்தக் குண்டை உரிய பாதுகாப்புடன் அகற்றுவதற்காக கிளிநொச்சி நீதிமன்ற உத்தரவு பெற நடவடிக்கை எடுத்துளனர்.

நீதிமன்ற உத்தரவு கிடைக்கும் வரை அந்த இடத்தில் மருதங்கேணிப் பொலி ஸார் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.